TAMIL NADU LEGIS... 5 - MA... MADR...

தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1972 சனவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Arrest of eve teasers near Sembiam.

* 61 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of eve teasers were apprehended near Girls' High School, Sembiam, Madras, during the last week of August 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

(இ) செம்பியம், ஊர்து பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பெரம்பூர் மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பெரம்பூர், எம். எச். சாலையில் உள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகிய வற்றிக்கு அருகில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எழும்பூர் கௌரவ சிறப்பு மாநகர மாஜிஸ்ட்ரேட்டினால் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப் பட்டார்கள்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, கல்விச்சாலைகளில் 'கோ-எஜுகேஷன்' 'யூனிஃபார்ம்' ஆகியவற்றைப் புகுத்துவது, பெண்களைக் கேலி செய்வதைத் தடுக்க வழிவகுக்கும் அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது ஒரு யோசனை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : செம்பியம் பகுதியில் அண்மை யில் நடந்த நிகழ்ச்சிகளில் பெண்களைத் துன்புறுத்தியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது; எங்களுக்கு நேரிலும் தகவல் வந்திருக்கிறது. அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் கேள்விக்கு பதில் அளித்தது உண்மை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல் வது கற்பனை.